இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli


www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 358 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆடி 22– வியாழக்கிழமை 07 ஆகஸ்ட் 2025 – மதுரை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 358 : Thiruvalluvar Year - 2056 - Aadi 22 - Thursday 07 August 2025 - Madurai 28 Pages ₹ 5.00


## தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – இன்று முத்தமிழறிஞர்

# கலைஞரின் 7-ஆம் ஆண்டு நினைவு அமைதிப் பேரணி!

## நாடெங்கும் சிலைகள் – திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி உலகத் தமிழர்கள் மரியாதை!



**சென்னை, ஆக.7-**

**முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7-ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று அமைதிப் பேரணி நடைபெறுகிறது. நாடெங்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைகள் - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி உலகத் தமிழர்கள் மரியாதை செலுத்துகின்றனர்.**

தமிழ்நாட்டிற்காக, தமிழ் இனத்திற்காக, தமிழ்மொழிக்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்த பெருமகன் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டிற்கு அவர் செய்திட்ட திட்டங்கள் ஒன்றா, இரண்டா பட்டியலிட, ஒவ்வொரு திட்டமும் தமிழ்நாட்டின் வளத்தை தமிழ் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவே அமைந்திருந்தன.

தமிழ்மொழிக்கு செம்மொழி அங்கீகாரம் கிடைக்கச் செய்து தமிழ்மொழிக்குப் பெருமைச் சேர்த்த திராவிட இயக்கப் பெருந் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் இன்று!

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ‘உங்களில் ஒருவன்’ கடிதம்!**

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தோழர்களுக்கு, கலைஞரின் உடன்பிறப்புகளுக்கு கடந்த 2.8.2025 அன்று ‘உங்களில் ஒருவன்’ கடிதம் எழுதினார்.

கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உங்களில் ஒருவன்’ கடிதத்தில்,

‘எப்போதும் மக்களுடன் நிற்கின்ற இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் தலைவர் கலைஞர் கட்டிக் காத்த இயக்கம். அவர் இல்லை என்று எண்ணாமல், என்றென்றும் அவர் நினைவுகளில் வாழ்கின்ற கோடிக்கணக்கான உடன்பிறப்புகளில் உங்களில் ஒருவனான நானும் இருக்கிறேன். ஆகஸ்ட் 7 அன்று நம் உயிர்நிகர் தலைவரின் நினைவு நாளில் தமிழர் வாழும் நிலமெங்கும் அவர் நினைவைப் போற்றுவோம்.

வங்கக் கடற்கரையில் தன் அண்ணனுடன் நிரந்தர ஓய்வு கொண்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடம் நோக்கி ஆகஸ்ட் 7 அன்று நடைபெறும் அமைதிப் பேரணியில் உடன்பிறப்புகள் கடலெனத் திரண்டு வணக்கத்தைச் செலுத்துவோம். மாவட்டங்கள்தோறும் அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞரின் திருவுருவச் சிலைகளுக்கு அந்தந்த மாவட்டக் கழக நிர்வாகிகள் - உடன்பிறப்புகள் மாலையிட்டு மரியாதை செலுத்திட வேண்டும். கிளைகள்தோறும் தலைவர் கலைஞரின் நினைவு போற்றப்பட வேண்டும்.

இந்நிகழ்வுகளில் கழக நிர்வாகிகள் காலை 7 மணியளவில் பங்கேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகளிலும் வீதிகளிலும் தமிழ் காத்த போராளியாம் முத்தமிழறிஞர் கலைஞரின் திருவுருவப் படங்களுக்கு, மலர்தூவி வணக்கம் செலுத்துங்கள். தலைவர் கலைஞரின் நினைவுகளை நெஞ்சிலேந்தி, கொள்கைவழிப் பயணத்தைத் தொடர்ந்து, 2026 சட்டமன்றத் தேர்தலில் 7-ஆவது முறையாகக் கழக ஆட்சி அமைந்திட உறுதியேற்போம். ‘ஓரணியில் தமிழ்நாடு’ எனும் மகத்தான முன்னெடுப்பில் மக்களை ஒருங்கிணைத்து களத்தில் வெல்வோம்! தலைவர் கலைஞர் புகழ் ஓங்குக! திராவிட முன்னேற்றக் கழகம் வெல்க!’ என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘உங்களில் ஒருவன்’ கடிதத்தில் அன்பழைப்பு விடுத்துள்ளார்.

இது குறித்து சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ., சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சென்னை தென்மேற்கு மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

முத்தமிழறிஞர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் 7வது நினைவு நாளினையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழகப் பொதுச்செயலாளர் துரை முருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., முதன்மைச் செயலாளர், துணைப் பொதுச்செயலாளர்கள் உள்ளிட்ட கழக முன்னணியினர் கலந்து கொள்ளும் “அமைதிப் பேரணி”, இன்று (ஆகஸ்ட் 7 - வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு சென்னை, அண்ணா சாலை, ஓமந்தூரார் வளாகத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் சிலை அருகிலிருந்து புறப்பட்டு, காமராஜர் சாலையில் அமைந்துள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்துவர்.

இதில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்டக் கழக, பகுதிக் கழக, வட்டக் கழக நிர்வாகிகள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, இலக்கிய அணி, தொழிலாளர் அணி, வழக்கறிஞர் அணி, தொண்டர் அணி, மீனவர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மகளிர் தொண்டர் அணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவர் அணி, பொறியாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, நெசவாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, கல்வியாளர் அணி, மாற்றுத்திறனாளிகள் அணி ஆகிய அனைத்து அணியினரும் பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றி அஞ்சலி செலுத்த திரண்டு வாரீர் என சென்னை கிழக்கு, சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர்கள் தங்களது அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**தமிழ்நாடு முழுவதும் திருவுருவச் சிலை - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை!**

மேலும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று (7.8.2025 - வியாழக் கிழமை) தமிழ்நாடு முழுவதும் உலகத் தமிழர்கள் அனைவரும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை - திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்துகின்றனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஏழை எளியோருக்கு உணவு மற்றும் நல உதவிகளை கழகத்தினர் வழங்குகின்றனர்.

---

## வழக்குத் தொடுத்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம்!

# ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தைச் செயல்படுத்த தடை இல்லை!


## உச்சநீதிமன்றம் அதிரடி தீர்ப்பு!

**புதுடெல்லி, ஆக. 7 -**

**“உங்களுடன் ஸ்டாலின்” திட்டத்திற்கு சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தடையை உச்சநீதிமன்றம் நீக்கி உத்தரவிட்டது மட்டுமின்றி, மேலும் தவறான புரிதலுடன் வழக்கு தொடர்ந்த அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு ரூ.20 லட்சம் அபராதம் விதிக்கப்படும் என எச்சரித்த உச்சநீதிமன்றம், ரூ.10 லட்சம் அபராதம் விதித்து, ஒரு வாரத்தில் செலுத்த உத்தரவிட்டது. அபராதத் தொகையை ஒரு வாரத்திற்குள் செலுத்தத் தவறினால் சி.வி.சண்முகம் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்றும், உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.**

**உச்சநீதிமன்றத்தில் தி.மு.கழகம் மேல்முறையீடு!**

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட விளம்பரங்களில் முன்னாள் முதல்வர் கலைஞர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் படங்களைப் பயன்படுத்த சென்னை உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது. அ.தி.மு.க. எம்.பி. சி.வி.சண்முகம் தொடர்ந்த வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தி.மு.கழகம் மேல்முறையீடு செய்தது.



வழக்கில் தி.மு.க. சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் முகுல் ரோஹத்கி, அ.தி.மு.க. ஆட்சியில் பல்வேறு திட்டங்களில் ஜெயலலிதாவின் படங்கள் இடம்பெற்றதை சுட்டிக்காட்டினார். புரட்சித் தலைவர் மற்றும் அம்மா என்ற வார்த்தைகள் இடம்பெற்ற 23 விளம்பரங்கள் அடங்கிய பட்டியலை வாசித்த, தமிழ்நாடு அரசின் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் அபிஷேக் மனு சிங்வி, அதனை தேர்தல் ஆணையம் அனுமதித்திருந்ததாகக் குறிப்பிட்டார்.

**விதிமீறல் கிடையாது: மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதம்!**

தி.மு.க. சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், பிரதமர், முதல்வரின் பெயர்கள் மற்றும் படங்களை பல்லாண்டுகளாகப் பயன்படுத்தி வருவதாகவும், அதில் எங்கும் விதிமீறல் கிடையாது என்றும் வாதிட்டார்.

வழக்குத் தொடர்ந்துள்ள சி.வி.சண்முகம், முன்பு அமைச்சராக இருந்தபோது அ.தி.மு.க. ஆட்சியில் 25 திட்டங்களை முதலமைச்சரின் பெயரில் செயல்படுத்தினார்கள் என தமிழ்நாடு அரசு தரப்பில் ஆஜரான அரசு வழக்கறிஞர் பி.எஸ்.ராமன் வாதத்தை முன்வைத்தது. அப்போது, சி.வி.சண்முகம் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மணிந்தர் சிங், அம்மா என்ற பெயர் பயன்படுத்துவதாகக் கூறியதைக் குறிப்பிட்டு, அது முதல்வரின் பெயர் அல்ல என்றார். அம்மா என்றால் Mother தானே என தலைமை நீதிபதி கவாய் குறிப்பிட்டார்.

அரசியல் தலைவர்களின் பெயர்களைப் பயன்படுத்தக் கூடாது என எங்கு குறிப்பிடப்பட்டுள்ளது என சி.வி.சண்முகம் தரப்புக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

இதில் தீர்ப்பளித்த தலைமை நீதிபதி கவாய் அமர்வு, மனுதாரருக்கு அக்கறை இருந்தால் பல அரசியல் கட்சிகள் கொண்டு வந்த அனைத்துத் திட்டங்களுக்கும் எதிராக மனுவைத் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றனர்.

**சி.வி.சண்முகத்துக்கு ரூ.10 லட்சம் அபராதம் வேண்டுமா? ரூ. 20 லட்சம் அபராதம் வேண்டுமா என கேள்வி!**

சி.வி.சண்முகம் தரப்புக்கு கண்டனம் தெரிவித்து 10 லட்ச ரூபாய் அபராதம் விதித்து உத்தரவிட்டனர். அதற்கு சி.வி.சண்முகம் தரப்பு எதிர்ப்பு தெரிவித்த நிலையில், 10 லட்ச ரூபாய் அபராதம் வேண்டுமா, 20 லட்ச ரூபாய் அபராதம் வேண்டுமா என நீதிபதிகள் கேட்டனர். 10 லட்ச ரூபாய் அபராதத்தை உயர்நீதிமன்றத்தில் சி.வி. சண்முகம் ஒருவாரத்தில் செலுத்தாவிட்டால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கலாம் என்றும் அதிரடி உத்தரவிட்டனர்.

**முதல்வர் மு.க.ஸ்டாலினின்**



**‘திராவிட மாடல்’ ஆட்சியில் கலைஞரின் நினைவைப் போற்றும் மகத்தான திட்டங்கள்!**



**பக்கம் 8 - 9**